29th March 1961]

Religious instructions to prisoners

* 1172 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறையிலுள்ள கைதிகளுக்கு அவரவர்கள் மத சம்பந்தமான போதனை தரப்படுகிறதா ?

(இ) அப்படியானால், அந்தப் போதனைகள் யாரைக் கொண்டு தரப் படுகின்றன ?

(உ) இல்லையானால், ஏன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Instructions are given by Honorary religious and moral lecturers.

(*c*) Does not arise.

Sri A. VEDARATHNAM : சிறையில் உள்ள கைதிகளுக்கு நல்ல ஒழுக்கம் ஏற்படுவதற்காக கிருஸ்தவர்களும் சரி, முஸ்லிம்களும் சரி நல்ல முறையில் சிறைக்குள்ளேயே மதபோதனை நடத்துகிறார்கள். அதுபோலவே இந்துமத போதனை நடப்பதாகத் தெரியவில்லை. சிறையில் உள்ள கைதிகளில் பெரும்பாலோர் இந்துக்கள் ஆதலால் ராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்தவர்கள், அல்லது இந்துமதப் பிரசாரகர்கள் இவர்கள் உதவியைக்கொண்டு சிறைக்குள்ளே மதபோதனை நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சமீபகாலமாகச் சிறையில் மதபோதனை நடைபெற்று வருவதைப்பற்றி தெரிந்துகொண்டிருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும்—கிருஸ்தவ மதம், முஸ்லிம் மதம் சம்பந்தமாக மட்டும் அல்ல—இந்து மதத்தினருக்கும் வாரத்திற்கு ஒரு முறை மதபோதனை நடைபெறச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

Sri K. B. S. MANI : சிறைச்சாலைக்குள்ளே மதபோதனை நடைபெறச்செய்வது அவர்களுக்குள்ளே பாகுபாட்டை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் ஆதலால் திருக்குறள் போன்ற பொது மறைகளைச் சிறைச் சாலையில் சொல்லிக்கொடுப்பதற்கும், வியாக்கியானம் செய்வதற்கும் நல்ல ஏற்பாடு செய்ய முயற்சிக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : திருக்குறளும் சொல்லிக்கொடுக்கப்படும். அந்த அந்தச் சமயத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மதபோதனை வேண்டும் என்கிறபோது அதைத் தடை செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராய் இல்லை.

Employees under local bodies (revised scales of pay)

* 1173 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள எல்லா ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கும், புதிய சம்பள உயர்வு கொடுத்தாகிவிட்டதா ?

(இ) இல்லாவிட்டால், காரணமென்ன ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (அ) Yes, Sir, except in the case of employees under local bodies in the Kanyakumari district and Shencottah taluk of the Tirunelveli district.